# சமதானத்திற்கான நோபெல் பரிசின் கதை

பரிசுகள் மீதான மதிப்பு தொடர்ச்சியாகக் குறைவடைந்து வந்துள்ளது. ஆனால் பரிசின் மீதான அவாவும் அது யாருக்கும் கிடைக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் இன்னமும் பரிசுகளை கவனிப்புக்குரியவையாக வைத்திருக்கின்றன. இன்னொரு வகையில் ஊடகங்கள் கட்டமைக்கிற பொதுவெளியில் பரிசுகளுக்கான அங்கீகாரத்தின் சமூகப் பெறுமானமும் பரிசுகளை வழங்கவும் பெறவும் வாய்ப்பளித்திருக்கிறது. பரிசுகளின் தன்மையும் அதைப் பெறுபவர்களின் செயல்களும் பரிசைத் தனக்கு அளித்து அவமதிப்பார்களோ என்ற அச்சத்தை சிலருக்கு உருவாக்கியும் இருக்கிறது. இதைப் பரிசின் தவறென்பதா அல்லது தவறின் பரிசென்பதா.

பரிசுகளையோ பட்டங்களையோ பொறுத்தவரை அவை பெருமளவும் அவற்றைப் பெறுகிறவர்களைப் பற்றிச் சொல்லுவதை விடக் கொஞ்சம் அதிகமாக அவற்றை வழங்குபவர்களைப் பற்றியும் வழங்கும் நோக்கங்கள் பற்றியும் சொல்லுகின்றன. நோபல் பரிசு நிச்சயமாக ஒரு விலக்கல்ல.

நோபெல் பரிசு உலகில் வழங்கப்படும் பரிசுகளில் அதி பிரபலமானதும் முக்கியமானதுமான விருதாகும். இப் பரிசுகளின் உருவாக்குனர் சுவீடன் நாட்டைச் சேர்ந்த அல்ஃபிரெட் நோபெல் ஆவார். இவர் பல அறிவியல் கண்டுபிடிப்புக்களைச் செய்தவராவார். இவர் டைனமைற்றைக் கண்டுபிடித்ததன் மூலம் பெரும் பணக்காரானார். வெடிபொருட்களதும் அவற்றுக்குரிய ஆயுதங்களினதும் உற்பத்தியும் செய்த இவரது பிரதான தொழிலாகப் போர்க்கருவி விற்பனை இருந்தது.



1888ம் ஆண்டு அவர் சாவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் தனது சொந்த மரண இரங்கற் செய்தியை அவர் பத்திரிகையில் வாசிக்கக் நேர்ந்தது. அவரது சகோதரரின் மரணத்தை தவறுதலாக இவருடையது எனக் கருதிய பிரெஞ்சுப் பத்திரிகையொன்று “மரண வியாபாரியின் மரணம்” என்ற தலைப்பில் இரங்கலொன்றை எழுதியிருந்தது.

“இவ்வாறு தானா உலகம் என்னை நினைவுகூரும்?” என்ற கேள்வியை அந்த இரங்கற் செய்தி அவர் மனதில் எழுப்பியது. அதன் விளைவாக அவர் உருவாக்கியனவே நோபெல் பரிசுகள். அவர் தனது உயிலில் மருத்துவம், இயற்பியல், வேதியல், இலக்கியம் ஆகிய துறைகளிற் பரிசுக்குரியோரை சுவீடன் தெரிவுசெய்ய வேண்டும் என்றும் சமாதானப் பரிசுக்குரியவரை நோர்வே பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் தெரிவுசெய்ய வேண்டும் என்றுங் கூறியிருந்தார்.

சுவீடன் ஆதிக்க நோக்குடைய நாடாக இருந்ததாலும் நோர்வே அணிசாரா நடுநிலை வெளியுறவுக் கொள்கையைக் கொண்டிருந்ததாலும் அரசியல் நெருக்குவாரங்களையும் சொந்த நலன்களையுங் கடந்து இச் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும் என நோபெல் விரும்பினார். 1901ம் ஆண்டிலிருந்து நோபெல் பரிசு இந்த அடிப்படையில் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது.

ஏனைய நொபெல் பரிசுகள் சுவீடனில் வழங்கப்படுகையில் சமாதானப் பரிசை மட்டும் நோர்வேயில் உள்ள நொபெல் பரிசுக் குழு வழங்குகிறது. எனவே அமைதிக்கான நொபெல் பரிசுக் குழுவை நோர்வே பாராளுமன்றம் தெரிவுசெய்கிறது. இதனால் சமாதான நொபெல் பரிசுக்கும் நோர்வேக்கும் நேரடியாக இல்லாவிட்டாலும் வலுவான மறைமுகத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. இதனால் நோர்வேயும் பரிசுக் குழுவும் பல்வேறு சிக்கல்களைச் சந்தித்து வந்திருக்கின்றன.

மியன்மாரில் ரொகிங்கியா முஸ்லீம்களுக்கு எதிரான அரசின் திட்டமிட்ட வன்முறைகள் நடந்தேறுகின்ற நிலையில் அவ்வாட்சியின் தலைமைப்பீடத்தில் சமாதானத்திற்கான நோபெல் பரிசை வென்ற அவுங் சான் சூகி அமர்ந்திருப்பதும் அவர் அங்கு நடக்கின்ற கொலைகளை மூடிமறைப்பதும் நியாயப்படுத்துவதும் நடக்கிறது. அவுங் சான் சூகிக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசைத் திரும்பப் பெறவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றிருப்பது நோபெல் பரிசுக் குழுவுக்கு சங்கடத்தை உருவாக்கியிருக்கிறது.

இதேவேளை 2010ம் ஆண்டு சீனாவின் லியு ஜியாபோவுக்கு பரிசை வழங்கியதற்கான கொடுந்தண்டனையை பல ஆண்டுகளாக நோர்வே அனுபவித்தது. சீனாவின் மனித உரிமைப் போராளி என்றும் சீன அரசின் மனித உரிமைமீறல்களை வெளிக்கொணர்ந்தவர் என்ற காரணம் காட்டப்பட்டு லியு ஜியாபோவுக்கு பரிசு வழங்கப்பட்டது. குற்றங்களுக்காகக் சிறைத்தண்டனையை அனுபவித்து வந்த லியு ஜியாபோவுக்கு இவ்விருதை வழங்குவதன் மூலம் அவரை விடுதலை செய்யவியலும் என்ற நம்பிக்கையில் இவ்விருதை பரிசுத் தெரிவுக்குழு அறிவித்தது.

இச்செயலை வன்மையாகக் கண்டித்த சீனா பொய்க்குற்றச்சாட்டுகளுக்கு வலுச்சேர்க்கும் செயலை பரிசுக்குழு செய்துள்ளது என்றுகூறி நோர்வேயுடனான இராஜதந்திர உறவுகளைத் துண்டித்தது. இது உலக அரசியல் அரங்கிலும் பொருளாதார ரீதியிலும் பாதிப்புக்களையும் நோர்வேக்கு ஏற்படுத்தியது. மிக நீண்டகால இராஜதந்திர நகர்வுகளின் பின்னர் 2017ம் ஆண்டே மீண்டும் இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் முழுமையான ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதோடு நோர்வே தூதராலயம் சீனத் தலைநகரில் திறக்கப்பட்டது.

எனவே நோர்வேயின் தேசிய அரசியலுடனும் அதன் வெளியுறவுக் கொள்கையுடனும் நோபெல் பரிசுக்கு நெருங்கிய தொடர்புண்டு.

**கேள்விகள்:**

1. நோபல் பரிசை உருவாக்கியவர் யார்?
2. எத்தனையாம் ஆண்டு முதன்முறையாக நோபெல் பரிசு வழங்கப்பட்டது?
3. எத்துறைகளுக்கு நோபெல் பரிசு வழங்கப்படுகிறது?
4. சமாதானத்திற்கான நோபெல் பரிசு ஏன் நோர்வேயினால் வழங்கப்படுகிறது?
5. நோர்வேயிற்கு சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர நெருக்கடி ஏன் ஏற்பட்டது?
6. ரொகிங்கியா மக்கள் எனப்படுவர்கள் யார்?

Videos:
How does the Nobel Peace Prize work?
https://www.youtube.com/watch?v=rXhpK_lhonA

The origins of the Nobel Prize
https://www.youtube.com/watch?v=gsACn9AUrw4

Do the Nobel Prizes Still Make Sense in the 21st Century?
https://www.youtube.com/watch?v=Z1jurgfMwMM